සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/14/2/7/2018/-2020 — ඔබේ අංකය / உமது இல / Your No: .......... — දිනය / திகதி / Date: 2018.06.08

**சமுர்த்தி சமூக பாதுகாப்பு சுற்றறிக்கை இலக்கம் 2018/12**

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள் சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் ஆகியோருக்கும்,

## சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் சமுர்த்தி "சிப்தொர" புலமைப்பரிசில் வேலைத்திட்டதினை செயற்படுத்துதல் - 2018/2020 கல்வியாண்டு.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டம் (2018/2020 கல்வியாண்டின் பொருட்டு) இவ்வாண்டிலும் செயற்படுத்தப்படவுள்ளது. அதன் பிரகாரம் முழு நாடும் உள்ளடங்குகின்றவாறு 15000 புலமைப்பரிசில்களை வழங்க தீர்மானங்க் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிப்தொர புலைமைப்பரிசு வேலைத்திட்டத்தின் மூலம் நாடு பூராகவும் உள்ள திறமையினைக் கொண்டுள்ள சமுர்த்திப் பயனாளிக்குடும்பங்களின் பிள்ளைகளிலிருந்து கல்வி பொதுதாராதர சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பிள்ளைகளுக்கு க.பொ.த (உ.தர) கல்வி கற்கும் பொருட்டு நிதியுதவிகள் வழங்கப்படும் இந்த மாதாந்த புலமைப்பரிசில் உதவி வழங்கப்படுவது கீழே காட்டப்படும் நோக்கங்களை முன்வைத்துக் கொண்டேயாகும்.

### 02. நோக்கம்:-

2.1. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் திறமை மற்றும் தகுதிகள் உள்ள மாணவர்கள் நிதி ரீதியான கஷ்டங்கள் காரணமாக உயர் கல்வியிலிருந்து விலகிச் செல்வததைத் தவிர்த்து அவர்களை அதன் பொருட்டு ஈடுபடச் செய்தல்.

2.2. ஆரம்பக் கல்வி மட்டத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையின் போது மகாபொல புலமைப்பரிசில் வேலைத்திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது இதற்கு இடைப்பட்ட மட்டமான க.பொ.த (சா/த) தேறி க.பொ.த (உ/த) கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் எதுவும் செயற்படுவதில்லை. இது மாணவர் ஒருவரின் உயர்கல்விக்கான ஆரம்ப வழியாகும் என்பதனால் இச்சந்தர்ப்பம் தவறிச் செல்ல வழி விடாமல் மாணவர்களின் எதிர்கால கற்கை நடவடிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் உயர் தரத்தில் கல்விகற்கும் மாணவர்களின் கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு உதவுவதனால் வறிய குடும்பங்களின் சிறுவர்கள் அதிகமானோருக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகளின் பொருட்டு சந்தர்ப்பங்களை விஸ்தரித்தல்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

2.3. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் மாணவர்களின் பொருட்டு சிறந்த சமூக பொருளாதார, சூழல் ஒன்றினை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு உதவுவதன் ஊடாக சமூகத்திற்கு பயனுள்ள பிரஜைகளை நாட்டில் உருவாக்குவதும், நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது பங்கேற்பினை அதிகமதிகமாக பெற்றுக் கொள்ளலும்.

2.4. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் மாணவர்களிடத்தேயே கூடிய ஆளுமை விருத்தியினை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவுதல் மற்றும் அதனூடாக அக்குடும்பங்களின் வாழ்க்கைக் தரத்தில் விருத்தியினை ஏற்படுத்துதல்.

2.5. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் சிறுவர்களது கல்வித் தேவைகளை விஸ்தரிப்பதனால் அக்குடும்பங்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.

2.6. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் உள ரீதியான மற்றும் ஆத்மீக ரீதியான வளர்ச்சிக்கு உதவியாக இருத்தல்.

**03. புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்தல்.**
**தேவையான தகுதிகள்:-**

3.1. சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பம் ஒன்றாக இருத்தல்.
3.2. 2017 அம் ஆண்டில் முதன் முறையாக க.பொ.த (சா/த) பரீட்சையில் தோன்றி 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) கல்வி கற்கும் மாணவர் ஒருவராக இருத்தல். (பாடசாலை அதிபரின் உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்)
3.3. குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் ஒருவராக இருத்தல்.
3.4 சமுர்த்தி பயனாளிகளிடத்தேயிருந்து
- ❖ சமூகத்தினால் பேணிப்பாதுகாக்கப்பட்ட வேண்டிய (சுபீட்சமல்லாத) மிக வறிய குடும்பங்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.
- ❖ தாய், தந்தையினை இழந்த, மாற்றுத்திறனாளி, வறிய குடும்பங்களின் மாணவர்கள் தொடர்பில் கூடிய கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.
(இணைப்பு 03 ஐப் பயன்படுத்துக.)

04. **புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் அடிப்படைகள்.**
மாவட்டத்திற்குச் சொந்தமான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை.

இங்கு மாவட்டத்திற்குறிய புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையினை கீழுள்ள எடுகோள்களுக்கமைய 15000 புலமைப்பரிசில் வரையறைக்குள் கணக்கிடப்பட்டுள்ளது. (இணைப்பு இலக்கம் 01)

I. ஒவ்வொரு மாவட்டத்தினதும் வறுமையைச் சுட்டி வீதம் (Poverty Head count index%)
II. ஒவ்வொரு மாவட்டத்திற்குறிய பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கைகளின் விதாசாரம்.
III. ஒவ்வொரு மாவட்டத்திற்குறிய சனத்தொகை வீதம்.
IV. ஒவ்வொரு மாவட்டத்தின் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை வீதாசாரம்.
V. ஒவ்வொரு மாவட்டத்திற்குறிய கிராம உத்தியோகத்தர்களது எண்ணிக்கையின் வீதாசாரம்.

4.2. பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை

கீழுள்ள எடுகோல்களை அடிப்படையாக கொண்டு தங்களது மாவட்டத்திற்கும் சொந்தமான ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் புலமைப்பரிசில் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. (இணைப்பு இலக்கம் 01.01- 01.25)

I. ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவினதும் சனத்தொகையின் வறுமையைச் சுட்டி வீதம் (Poverty Head count index%)

II. ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவு எண்ணிக்கைகளின் விதாசாரம்.

III. மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவினது சனத்தொகையின் வீதம்.

IV. மாவட்டத்தின் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் எண்ணிக்கையின் வீதாசாரம்.

**குறிப்பு:-**

மேற்படி நிபந்தனைகளை (எடுகோள்களை) அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான புலமைப்பரிசின் எண்ணிக்கையினையும் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுக்கான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கைகளை எதிர்காலத்தில் அறியத்தருவேன். (இணைப்பு இலக்கம் 01) (இணைப்பு இலக்கம் 01.01- 01.25)

**05. புலமைப்பரிசில் பெறுவோரை தெரிவு செய்து கொள்ளல்:-**

5.1. இந்த சிப்தொர புலமைபப்பரிசில் வேலைத்திட்டம் தொடர்பில் குறித்த பிரிவில் வதியும் சகல நிவாரனம் பெறுவோரை விளக்கமளிப்பது. (அறிவித்தல்கள், கூட்டங்கள் போன்றவை மூலம்) பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் நேரடிப் பொறுப்பாகும். (கடந்தாண்டில் தலைமைக் காரியாலயத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கமைய சகல சமுர்த்திப் பயனாளிகளும் விளக்கமளிக்கப்படவில்லை என்ற விடயம் தெளிவாகியிருந்தது.)

5.2. **விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றல்:-**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 02 ஆம் இலக்கப்படிவத்திற்கமைய தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பதாரியால் தான் வசிக்கும் பிரதேச செயலகப்பிரிவின் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளரின் சிபாரிசுடன் 2018.06.25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5.3. **நேர்முகப் பரீட்சைக்குழு, மற்றும் புலமைப்பரிசில் பெறுவோரின் பெயர்ப்பட்டியலை அனுப்புதல்.**

I. பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரைத் தலைவராகவும், பிரதேச செயலாளரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒருவரும் கட்டாயமாக பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரும் உட்பட்டதாக மூவரைக் கொண்ட நேர்முகப்பரீட்சைக் குழு ஒன்றினை நியமித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக் குழு புள்ளிகளை வழங்கும் போது இணைப்பு இலக்கம் 03 என்ற படிவத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும்.

II. இம்மாணவர்களை தெரிவு செய்ததன் பின்னர் மேற்சொன்ன பெயர்களை மீள திருத்தம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதனால் சரியான இறுதிப் பெயர்ப் பட்டியலை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தங்களது மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்சபட்ச புலமைப்ரிசில்களின் எண்ணிக்கை கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது என்பதை வினயமுடன் அறியத் தருகின்றேன்.

III. மேற்படி தகுதிகளையுடைய மாணவர்களை புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் பொருட்டு தெரிவு செய்து கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுவோரின் பெயர்ப்பட்டியலை 2018.07.10ஆம் திகதிக்கு முன்னர் தலைமையக சமுர்த்தி முகாமையாளரின் முழுக் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்( இணைப்பு இலக்கம் 4 படிவம்)

IV. அப்பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுவோருக்கு மேலதிகமாக நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்ட சகல மாணவர்களினதும் தகவல்கள் உள்ளடங்கிய பெயர்ப்பட்டியலையும் முன்னுரிமைப்படுத்தி மாவட்டச் செயலகத்திற்கு அனுப்புதல்

வேண்டும் மாவட்டச் செயலகத்தில் ஆவணப்படுத்தி வைத்துக்கொள்வது போது மானதாகும். (இணைப்பு இலக்கம் 05ஆம் படிவம்)

V. மாவட்ட பணிப்பாளரால் மாவட்டத்திற்குறிய புலமைப்பரிசினைப் பெறுவோரின் பெயர்ப்பட்டியலை ( பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் சரியாக தயாரித்து) 2018.07.20ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்துடன் தலைமைக் காரியாலயத்திற்கு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டியதுடன் யுனிகோரட் பயன்பாட்டுடன் கீழுள்ள முகவரிக்கு மின்னஞ்சல் ஊடாகவும் கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். ssfsamurdhi@yahoo.com (06 இலக்க இணைப்பு படிவத்திற்கமைய)

**06. நேர்முகப் பரீட்சைக் கொடுப்பனவும் உபசரிப்புச் செலவும்**

6.1. அரசாங்கத்தின் அங்கீகரித்த பிரகாரம் நேர்முகப்பரீட்சைக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

6.2. நேர்முகப் பரீட்சைக் குழு உபசரனை செலவாக உயர்ந்தபட்சம் ரூபா 2000/= இற்கு உட்பட்டதாக செலவுகளை மேற்கொள்ளமுடியும்.

6.3. நேர்முகப் பரீட்சைக் குழுவின் கொடுப்பனவு மற்றும் உபசரனைச் செலவுகளை சமூக பாதுகாப்பு நிதியத்தின் கணக்கிலிருந்து கொடுப்பனவுகளை மேற்கொண்டு ஈடுசெய்து கொள்ளல் வேண்டும்.

**07. செயற்படுத்தப்படும் விதம்**

7.1. புலமைப்பரிசில் கொடுப்பனவினை வழங்கும் போது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் புலமைப்பரிசுகளைப் பெறுபவரின் பெயரில் சிசுறக்க கணக்கொன்றினை ஆரம்பித்து தவணைப்பணத்தினை வங்கிக் கணக்கில் வைப்பிலிடல் வேண்டும். (சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை 2016/05)

7.2. புலமைப்பரிசில் தொகையினை வங்கிக்கணக்கில் வரவிட்ட உடனேயே அது பற்றி புலமைப்பரிசில் பெறுபவருக்கு அறிவிக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7.3. புலமைப்பரிசில் தொகையினை வங்கியிலிடுகின்ற சந்தர்ப்பத்திலேயே குறித்த மாணவரின் உரித்துப் படிவத்தில் பணம் செலுத்திய திகதியினை பிழையின்றி பதிவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**08. புலமைப்பரிசில் கொடுப்பனவு:-**

8.1. மாதாந்த கொடுப்பனவானது ரூபா 1,500.00 ஆகும் என்பதுடன் அதில் பாடசாலை விடுமுறைக் காலமும் உள்ளடங்களாக க.பொ.த (உ/த) கற்கும் மாணவர்களுக்கு இரு வருடங்களுக்கு (24 மாதங்கள்) வழங்கப்படும். புலமைப்பரிசில் கொடுப்பனவின் போது புலமைப்பரிசிலைப் பெறுவருக்கு வழங்கப்படுகின்ற ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு முதலாவது புலமைப்பரிசில் தொகையினை வழங்க வேண்டியதுடன் அதன் பின்னர் சமூக பாதுகாப்பு நிதியக்கணக்கிலிருந்து செலுத்தி ஒவ்வொரு மாதமும் ஈடுசெய்து கொள்ளல் வேண்டும்.

8.2. சிப்தொர புலமைப்பரிசிலின் பொருட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், தொடர்பில் பாடசாலை அதிபரின் சிபார்சினை மாதாந்தம் பெற்றுக் கொள்வதில், ஏதேனும் காரணத்தினடிப்படையில் முடியாவிடின் மாத்திரம் குறித்த மாணவர் பாடசாலை செல்கின்றதனை சமுர்த்தி உத்தியோகத்தரின் மூலம் சிபாரிசினைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் 06 மாதங்களுக்கொருமுறை கட்டாயமாக பாடசாலை அதிபரின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8.3. இப்புலமைப்பரிசில் கொடுப்பனவினை எக்காரணம் கொண்டும் குறைக்கப்படலாகாது என்பதுடன் தாமதப்படுத்தலுமாகாது.

8.4. பிற அரசாங்க அல்லது தனியார் மாணவர் உதவித் தொகைகள் அல்லது உதவிப்பணங்களைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிக் குடும்பங்களின் மாணவர்களுக்கும் இந்த மாணவர் உதவித்

தொகையின் பொருட்டு விண்ணப்பிக்க உரிமையுண்டு (2016 க.பொ.க (சா/தர) பரீட்சையின் பின்னர் இது உரித்துடையதாகும்.)

**09. செயலற்றுப் போதல்.:-**

9.1. புலமைப்பரிசிலைப் பெறுபவர் பாடசாலைக் கல்வியினை விட்டுச் செல்லல்.

9.2. புலமைப்பரிசிலைப் பெறுபவரின் பாடசாலை வரவு, நடத்தைகள், மற்றும் கற்றல் நடவடிக்கைகள் திருப்திகரமற்ற சந்தர்ப்பங்களின் போது.

9.3. புலமைப்பரிசினைப் பெறுவோர் திருமணமாகின்ற பட்சத்தில்.

9.4. புலமைப்பரிசைப் பெறுவோர் இறக்கும் பட்சத்தில்.

**10. புலமைப்பரிசிலை திருத்தம் செய்தல்.**

10.1. 09ம் இலக்கப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் புலமைப் பரிசிலை திருத்தஞ் செய்ய முடியும்.

10.2. புலமைப்பரிசிலை திருத்தஞ்செய்ய மாவட்ட பணிப்பாளருக்கு அதிகாரத்தினை வழங்குகின்றேன். அதன் பிரகாரம் தனது மாவட்டத்திற்கும் பிரதேச செயலகத்திற்கும் அங்கீகரித்த புலமைப்பரிசில் களின் எண்ணிக்கைக்கு இசைவாக முன்னுரிமைப்பட்டியலுக்கமைய திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

10.3. திருத்தங்களுக்குள்ளாக்கப்பட்ட புலமைப்பரிசில்களை கொண்ட விபரங்களை உடனடியாக தலைமைக்கரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் வெற்றி தொடர்பில் தாங்கள் உட்பட பணியாளர்கள் வழங்கும் ஒத்துழைப்பினை போற்றி மதிக்கிறேன்.

ஜே.தடல்லகே.
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

| | | |
|---|---|---|
| I. | செயலாளர், சமூக வலுவூட்டல்கள் அமைச்சு | - த.கூ.க. பொருட்டு |
| II. | செயலாளர், கல்வி அமைச்சர் | - த.கூ.க. பொருட்டு (புலமைப்பரிசில் பெறுவோர்களின் பெயர்ப்பட்டிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்) |
| III. | சகல பிரதேச செயலாளர்கள் | - மேற்படி ஆலோசனைகளைப் பின் பற்றி பிரதேச செயலகப்பிரிவில் சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினை செயற்படுத்தவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு |
| IV. | பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் | -த.கூ.க.பொருட்டும், உ.ந பொருட்டும். |
| V. | சகல பிரிவுத் தலைவர்கள் | -த.கூ.க.பொருட்டும். உ.ந பொருட்டும். |

TRANSLATED BY – M.M.M.JAWHAR (Translator)